# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.38 /2015**

திருமதி டாக்டர் மோகனா பாலுசாமி,
க/பெ டாக்டர் பாலுசாமி,
சத்தி – ஈரோடு ரோடு
கிருஷ்ணாபுரம்,
கவுந்தம்பாடி,
பவானி வட்டம்,
ஈரோடு வட்டம். ........மேல் முறையீட்டாளர்
(திரு. M.P. முருகேசன், வழக்கறிஞர்
மற்றும் திரு. B.A. துரைசாமி)

எதிர்

1) திரு. K.R. லோகநாதன்,
603, சத்திரோடு,
கவுந்தம்பாடி
ஈரோடு மாவட்டம் – 638 455. ......... எதிர்மனுதாரர்–1
(திரு. கே. குமாரவேல்)

2) தலைவர்
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
ஈரோடு. ......... எதிர்மனுதாரர்–2
(திரு. V. ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர்/ கவுந்தம்பாடி
மற்றும் திரு. V. பழனியப்பன், இளநிலை பொறியாளர்/நகரம்/கவுந்தம்பாடி)

**கேட்புரை நாள்: 31–7–2015**

**ஆணை நாள் : 21–8–2015**

திருமதி (டாக்டர்) மோகனா பாலுசாமி, க/பெ திரு (டாக்டர்) பாலுசாமி, கிருஷ்ணாபுரம், கவுந்தம்பாடி அவர்களின் 15–4–2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண் 38/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை

31–7–2015 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், இருதரப்பினராலும், கேட்புரையின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து, மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :</u> மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் 27–3–2015–ம் தேதி பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து, மேல்முறையீட்டை அனுமதித்து உத்தரவு பிறப்பிக்க வேணுமாய் பிரார்திக்கிறார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மின் இணைப்பு எண் 020–008–308, சலங்கபாளையம் கிராமம் சர்வே எண் 327/2ல் உள்ள கிணற்றிற்கு திரு. R. நடராஜன் பெயரில் வழங்கப்பட்டுள்ளது.

2.2 திருமதி (டாக்டர்) மோகனா பாலுசாமி அவர்கள் திரு. R. நடராஜன் அவர்களிடமிருந்து அவருக்கு சொந்தமான SF No.327/2 ல் உள்ள நிலத்தில் அவரின் பாகத்தை 27–6–1990ல் வாங்கியுள்ளார் அந்த மின் இணைப்பு எண் அவரின் பெயருக்கு 23–7–2008ல் மாற்றப்பட்டுள்ளது.

2.3 திரு. K.R. லோகநாதன், மேற்கண்ட கிணறு மற்றும் விவசாய மின் இணைப்பில் தனக்கும் பாதி உரிமை உள்ளது என்பதால் அந்த இணைப்பில் அவரையும் உரிமையாளராக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று, ஈரோடு மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்.

2.4 மன்றம் வருவாய் ஆவணத்தின்படி அவருக்கோ அல்லது அவரின் மணைவி திருமதி தனலட்சுமிக்கோ ஆகிய இருவரில் யாருக்கு உரிமை உள்ளதோ அவருக்கு அந்த மின் இணைப்பில் கூட்டு உரிமையாளர் என்று சேர்க்க நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவு இட்டுள்ளது. மேற்கண்ட உத்தரவில் அதிருப்தியற்ற திருமதி மோகனா பாலுசாமி அவர்கள் மன்றத்தின் உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று மேல்முறையீடு செய்துள்ளார்.

3. <u>மன்றத்தின் ஆணை:</u>

ஈரோடு மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் 27–3–2015 நாளிட்ட ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"முடிவுரை*

*மனுதாரரின் கோரிக்கையையும் அதற்கான கழகத்தரப்பினரது அறிக்கை மற்றும் சமர்ப்பித்த ஆவணங்கள் ஆகியவற்றையும் ஆராய்ந்து பார்த்ததில் திருமதி. மோகனாபாலுசாமி திரு. K.R. லோகநாதன் அவர்களது* ***30.09.1986*** *நாளிட்ட உடன்படிக்கை பத்திரத்தின் அடிப்படையிலும், மின் இணைப்பு எண்* ***020–008–308*** *மற்றும் அக்கிணற்றில் இருவருக்கும் சரி பாதி கூட்டு உரிமை பற்றிய விவரம் பத்திரப் பதிவில் இருந்தாலும், தற்பொழுது திருமதி. மோகனாபாலுசாமி அவர்களது பெயர் மாற்றம் வேண்டி விண்ணப்பித்த பொழுது வழங்கிய கிராம நிர்வாக அலுவலர் சான்றில் கூட்டு உரிமையாளர் திருமதி. தனலட்சுமி, க/பெ. திரு. K.R. லோகநாதன் என சான்றளித்தமையால் கூட்டு உரிமையாளர் திரு. K.R. லோகநாதனா அல்லது திருமதி. தனலட்சுமியா என்பதை ஆவணங்களின் மூலம் உறுதி செய்து உரிய விண்ணப்பம் மற்றும் அதற்கான ஆவணங்களைப் பெற்று அவற்றின் அடிப்படையில் மின் கழக விதிமுறைகளின் படி உரிய கூட்டு உரிமையாளரின் பெயரைச் சேர்க்க கழக விதிமுறைகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு செயற்பொறியாளர், நகரியம், ஈரோடு அவர்களுக்கு இம்மன்றத்தின் இறுதி உத்தரவு வழங்கப்படுகிறது."*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>**

4.1 தலைவர், மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் இளமின் பொறியாளர் இ.மி.பொ/இ.பே/சோ.பெ.எண்225 நாள் 27.12.2014 அனுப்பிய கடிதத்துக்கு மேல்முறையீட்டாளர் 31.12.2014 தேதியிட்டு அனுப்பிய பதில் அறிவிப்பை கவனத்தில் கொள்ளாமல் பிறப்பிக்கப்பட்ட உத்திரவு சட்டத்திற்கு புறம்பானது.

4.2 30.09.1985 தேதி 1–ம் எதிர்மேல்முறையீட்டாளருக்கும், அவரது சகோதரர் நடராஜன் (மேல்முறையீட்டாளர் கிரையதாரர்) ஏற்பட்ட குடும்ப உடன்படிக்கை பதிவு செய்யப்படாத ஆவணம். அந்த ஆவணத்திற்கு சாட்சிய மதிப்பீடு ஏதும் இல்லை என்பதை மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் கவனிக்க தவறி விட்டது.

**4.3 1–ம்** எதிர்மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு எண் **020–008–308** TF IV என்ன பாத்தியம் என்று ஆவணங்களும், சாட்சியமும் அளிக்காத நிலையில், **1–ம்** எதிர்மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பில் **1–ம்** எதிர்மேல்முறையீட்டாளரையோ, அவரது மனைவி தனலட்சுமியையோ சேர்க்க உத்திரவு பிறப்பிக்கப்பட்டது சட்டப்படியும், நியாயப்படியும் தவறானது ஆகும்.

**4.4** மின் குறை தீர்க்கும் மன்றம் **1–ம்** எதிர்மேல்முறையீட்டாளரையோ அவரது மனைவி தனலட்சுமியையோ செயற்பொறியாளர் உரிய விண்ணப்பம் பெற்று, அதற்குண்டான ஆவணங்களை பெற்று கூட்டு உரிமையாளர் பெயரை மின் இணைப்பில் சேர்க்க மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் இட்ட உத்திரவு சட்டப்படி சரியல்ல. மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றமே ஆவணங்களை பரிசீலித்து உத்திரவு பிறப்பிக்க வேண்டும். செயற் பொறியாளர் பரிசீலனை செய்ய பரிந்துரை செய்தது சட்டப்படியும், நியாயப்படியும் தவறு.

**4.5 1–ம்** எதிர்மேல்முறையீட்டாளர் அவரை மின் இணைப்பில் சேர்க்க மனு செய்துள்ளார். தனலட்சுமி மனு செய்யவில்லை. **1–ம்** எதிர்மேல்முறையீட்டாளர், தனலட்சுமியை மின் இணைப்பில் சேர்க்க கோருவது இல்லை என்பதை மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் கவனிக்க தவறி விட்டது. கூட்டாக மின் இணைப்பில் சேர்க்க கோரும் மனுவில் இல்லாத நபரை சேர்க்க செயற்பொறியாளர் ஆவணங்களை பரிசீலித்து உத்திரவு பிறப்பிக்க உத்திரவு பிறப்பித்துள்ளது சட்டப்படி தவறாகும்.

**4.6** மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் **1–ம்** எதிர்மேல் முறையீட்டாளர் மின் இணைப்பில் அவருக்கு மின் இணைப்பில் பாத்தியம் என ஆவணங்கள் சமர்ப்பிக்காத நிலையில், கிராம நிர்வாக அலுவலர் தனலட்சுமிக்கு கிணற்றில் பாத்தியம் என்று கொடுக்கப்பட்ட சான்றை வைத்து தனலட்சுமிக்கு மின் இணைப்பில் உரிமை உள்ளது என்று முடிவுக்கு வந்தது சட்டப்படி தவறு. கிராம நிர்வாக அலுவலர் சான்று உரிமைக்கு சட்டப்படி ஏற்றுக் கெள்ள முடியாது என்பதை கவனிக்க தவறி விட்டது.

4.7 மின் இணைப்பு எண் 308 டாக்டர் மோகனா பாலுசாமியின் கிரையதாரர் நடராஜனுக்கு தனித்து பாத்தியம் நடரரஜன் தனித்து பாத்தியப்பட்ட மின் இணைப்பு எண் 308ல் தனித்து மின் மோட்டார் பம்பு செட் அமைத்து விவசாயம் செய்து வந்தார். லோகநாதனுக்கு மின் இணைப்பிலோ, மின் மோட்டாரிலோ எந்த விதமான பாத்தியமும் அனுபவமும் இல்லை.

4.8 லோகநாதன் தாக்கல் செய்த 30.09.1985 குடும்ப உடன்படிக்கை பதிவு செய்யப்படாத ஆவணம் 30.09.1985 குடும்ப உடன்படிக்கைக்கு சாட்சிய மதிப்பு (No evidentiary value) ஏதும் இல்லை. அந்த ஆவணத்திலும் கிணற்றிலும் பூமியிலும் தான் பாத்தியம் கண்டுள்ளது மின் இணைப்பிலோ, மின் மோட்டாரிலோ காணப்படவில்லை. லோகநாதனுக்கு மின் இணைப்பு 308ல் பாத்தியம் ஆவணங்கள் இல்லாத நிலையில் உரிமை இயல் நீதிமன்றத்தின் மூலம் உத்திரவு பெற்று உத்திரவை தாக்கல் செய்த மின் இணைப்பில் பாத்தியத்தை ஊர்ஜிதம் செய்துதான் மின் இணைப்பில் லோகநாதன் பெயரை சேர்க்கக் கோர வேண்டும். எந்தவித ஆவணமும் இன்றி சேர்க்கக் கோருவது சட்டப்படியும், நியாயப்படியும் சேர்க்கக் கோருவதை ஏற்கமுடியாது.

4.9 27.06.1990 தேதியிட்ட விற்பனை பத்திரத்தில் மோகனா பாலுசாமி மின் இணைப்பில் மின்மோட்டாரில் பாதி கிரையம் பெற்றுள்ளதால் பாக்கி பாதி லோகநாதனுக்குதான் என்று எடுத்துக்கொள்ள முடியாது. மின் இணைப்பு 308 மின் மோட்டாரில் மோகனா பாலுசாமியின் கிரையத்தார் நடராஜனுக்கு பாத்தியம் மின் இணைப்பில் மோகனா பாலுசாமி பெயரை சேர்க்க ஆட்சேபனை இல்லையென்று நடராஜன் மின்வாரியத்தில் சம்மத கடிதம் கொடுக்கப்பட்டதின் பேரில் மின் வாரியத்தார் மோகனா பாலுசாமியின் பெயரை மின் இணைப்பில் சேர்த்து 23.07.2008 தேதியில் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

4.10 மோகனா பாலுசாமி 27.06.1990 கிரையத்துக்கு முன்பு கிரையதாரர் நடராஜன்தான் மின் இணைப்பு 308 மற்றும் மின் மோட்டாரையும் பயன்படுத்தி வந்தார். கிரையத்திற்கு பின்பு மோகனா பாலுசாமிதான் மின் இணைப்பையும் மோட்டாரையும் பயன்படுத்தி வருகிறார். லோகநாதனோ அவரது மனைவி தனலட்சுமியோ மின் இணைப்பையோ, மின் மோட்டாரையோ,

எந்த காலத்திலும் பயன்படுத்தியது இல்லை. பயன்படுத்தியதாக கோரவும் இல்லை, சாட்சியமும் இல்லை.

**5. <u>எதிர்மனுதாரர்(2)இன் பதிலுரை</u>**

5.1 திரு P. ராமசாமி முதலியார் மனைவி திருமதி. பச்சியம்மாள் (1) அவர்கள் கடந்த 30.09.1986 அன்று பதிவு செய்யப்படாத பாக ஒப்பந்த உடன்படிக்கை சாசனத்தின் படி அவர்களது குமாரர்களான திரு. R. நடராஜன் (2) மற்றும் திரு. K.R. லோகநாதன் (3) ஆகியோருக்கு கூட்டாக பெரியோர்கள் முன்னிலையில் பதிவு செய்யப்படாத பாகப் பிரிவினைக்கான ஒப்பந்த உடன்படிக்கை சாசனம் தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் சலங்கபாளையம் கிராமம் சர்வே எண். 327/2 யில் அமைந்துள்ள நிலமும் மற்றும் கிணறும் அதில் உள்ள விவசாய மின் இணைப்பு எண் 020–008–308 லும் திரு. R. நடராஜன் (2) மற்றும் திரு. K.R. லோகநாதன் (3) ஆகியோருக்கு சரி பாதி பாத்தியம் என B ஷெட்யூல் மற்றும் C ஷெட்யூல் பதிவாகியுள்ளது.

5.2 திரு. R. நடராஜன் அவர்கள் தனக்கு சரிபாதியாக பாத்தியப்பட்ட மேற்குறிப்பிட்டுள்ள கிணறும், அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை திருமதி Dr. மோகனா பாலுசாமி அவர்களுக்கு பத்திரப்பதிவு எண். 639, 27.06.1990 அன்று பதிவாகிய கிரயப்பத்திரத்தின் படி கிரயம் செய்து கொடுத்துள்ளார். பத்திர எண் 639/27.06.1990–ல் திரு K. நடராஜன் அவர்கள் சுமார் 3 (மூன்று) வருடங்களுக்கு முன்பு தமக்கும் அவருடைய தம்பி திரு K.R. லோகநாதன் ஆகிய இருவருக்கும் பாத்தியப்பட்ட இந்து அபியன் குடும்ப சொத்துக்களை பஞ்சாயத்தாரை வைத்து அவர்கள் முன்னிலையில் பிரித்து எழுதிக் கொண்ட உடன்படிக்கையின் படி தான் அனுபவித்து வரும் சொத்துக்களை பிரித்து கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள். அதில் சொத்து விவரத்தில் மின் இணைப்பு எண் 020 008 308 –ல் பொதுவில் 1/2 யும் என குறிப்பிட்டுள்ளது.

5.3 திருமதி Dr. மோகனா பாலுசாமி அவர்கள் மேற்படி மின் இணைப்பினை திரு.R. நடராஜன் பெயரில் இருந்து தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு 23.06.2008 அன்று அளித்துள்ள பத்திரப்பதிவு எண் 639, 27.06.1990 அன்று பதிவாகிய கிரையப்பத்திரத்தின் படி

சலங்கபாளையம், அ–கிராமம் சர்வே எண். 327/2 –யில் அமைந்துள்ள நிலம் மற்றும் கிணறு மேலும் அதில் உள்ள விவசாய மின் இணைப்பு எண் 020–008–308 –ன் அரை பாகத்தைத் தான் திரு. K. நடராஜன் அவர்கள் திருமதி. Dr. மோகனா பாலுசாமி அவர்களுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் எனவும், மீதி பாதி திரு. K.R. லோகநாதன் என்பவருக்கு பாத்தியமானது எனவும் தெளிவாகத் தெரிகிறது. எனவே தான் அப்பத்திரத்தின் ஆதாரமாகவும், சாட்சியமாகவும் கருதி அதன் அடிப்படையில் சரி பாதி சொத்தின் நிலையினைக் கருத்தில் கொண்டு மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தின் இறுதி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

5.4 திருமதி Dr. மோகனா பாலுசாமி அவர்களது 31.12.2014 நாளிட்ட கடிதத்தின் மூலம் 30.09.1986 தேதியிட்ட பதிவு அவ்வாறு சாட்சிய மதிப்பில்லாத ஆவணத்தின் அடிப்படையில் திரு.K.R. லோகநாதன் பெயரை மின் இணைப்பில் அவருடைய பெயரை இணைக்கக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் சட்ட சாட்சிய மதிப்பு இல்லாத 30.09.1986 நாளிட்ட உடன்படிக்கையை வைத்து தான் 27.06.1990 அன்று திரு. R. நடராாஜன் அவர்களிடமிருந்து சொத்து திருமதி. Dr. மோகனா பாலுசாமி அவர்களால் கிரயம் செய்யப்பட்டுள்ளது என்பதால் மேல்முறையீட்டாளர் 31.12.2014 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்தும் முற்றிலும் தவறானவையே ஆகும்.

5.5 மேலும் 23.07.2014 நாளிட்ட விண்ணப்பத்தில் திரு. K.R. லோகநாகன் தனது பெயரை சேர்க்கக் கோரி ஆவணங்களை அளித்ததன் அடிப்படையில் மின் இணைப்பு இருவருக்கும் பாத்தியமுள்ளதை கண்டறிந்ததால் மேல்முறையீட்டாளரிடம் 27.12.2014 நாளிட்ட இளமின்பொறியாளர் அவர்களது கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

5.6 கடந்த 30.09.1986 அன்று ஏற்பட்டுள்ள பதிவு செய்யப்படாத பாக ஒப்பந்த உடன்படிக்கையின் படி சலங்கபாளையம், அ – கிராமம் சர்வே எண் 327/2 யில் அமைந்துள்ள நிலமும் மற்றும் கிணறும் அதில் உள்ள விவசாய மின் இணைப்பு எண் 020–008–308 –ல் திரு.

K.R. லோகநாதன் என்பவருக்கு சரிபாதி பாத்தியம் உள்ளது என்பதாலும், 23.07.2008 அன்று நடைபெற்ற பெயர் மாற்று முகாமில் திருமதி Dr. மோகனா பாலுசாமி அவர்கள் மேற்படி மின் இணைப்பினை தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு வழங்கப்பட்ட ஆவணங்களில் ஒன்றான கிராம நிர்வாக அலுவலர் அவர்களது சான்றில் திருமதி. தனலட்சுமி, க/பெ K.R. லோகநாதன் அவர்கள் கூட்டு உரிமையாளர் என்று சான்றளித்துள்ளார். அதன் அடிப்படையில் தான் திருமதி. தனலட்சுமி மற்றும் திரு. K.R.லோகநாதன் இவர்களில் யாருக்கு வருவாய்த்துறை ஆவணங்களின் படி உரிமை இருக்கிறதோ அவர்களின் பெயரை மின் இணைப்பு உரிமையாளர் பெயருடன் கூட்டாக சேர்க்க வேண்டும் என உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

5.7 1–ம் எதிர் மேல்முறையீட்டாளர் திரு.K.R. லோகநாதன் அவர்கள் ஏற்கனவே இளமின்பொறியாளர், நகர், கவுந்தம்பாடி அவர்களுக்கு தனது 23.07.2014 நாளிட்ட கடிதத்தில் தனக்கும் தனது சகோதரர் இருவருக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட கிணற்றில் உள்ள மின் இணைப்பும், நிலமும் தனது சகோதரர் திரு. R. நடராஜன் 27.06.1990 –ல் திருமதி. Dr. மோகனாபாலுசாமிக்கு விற்று விட்டார். தற்பொழுது திருமதி Dr. மோகனாபாலுசாமி பெயரில் மின் இணைப்பு உள்ளதால் தனது பெயரையும் சேர்க்க (1) 30.09.1986 பாக ஒப்பந்த சாசனம் நகல் (2) 27.06.1990 ஆம் தேதிய கிரைய சாசனம் நகல் (3) ரீ.ச. 327 –ன் வரைபடம் (4) சிட்டா, அடங்கல், ஆர்.எஸ்.ஆர் (5) கிராம நிர்வாக அலுவலர் சான்று (6) கந்தாய ரசீதுகள் இணைக்கப்பட்டு பெயர் மாற்ற படிவம் மற்றும் விவசாய விண்ணப்பம் வழங்கி மின் இணைப்பில் பெயரை சேர்க்குமாறு கோரியுள்ளார். அதன் அடிப்படையில் தான் 25.09.2014 நாளிட்ட உதவி கணக்கு அலுவலர், வருவாய்பிரிவு, நகரியம், ஈரோடு அவர்கள் திரு. K.R. லோகநாகன் அவர்களின் வேண்டுகோளின் பேரில் திருமதி. Dr. மோகனாபாலுசாமி அவர்களிடம் ஒப்புதலைப் பெற்று அனுப்புமாறு இளமின் பொறியயளர், நகர், கவுந்தம்பாடி அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

5.8 30.09.1986 –ல் மேற்கொண்ட பதிவு செய்யப்படாத பாக ஒப்பந்த உடன்படிக்கை படி திரு.R. நடராஜன் மற்றும் திரு. K.R. லோகநாதன் இருவருக்கும் சலங்கபாளையம் கிராமம் ரீ.சர்வே எண் 327/2 –ல் உள்ள கிணறு மற்றும் நிலத்தில் சரிபாதி பாத்தியமுள்ளது என்று பதிவாகியுள்ளதாலும், திருமதி. Dr. மோகனா பாலுசாமி அவர்கள் மின் இணைப்பு எண் 020–008–308 –ஐ தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு 23.6.2008 அன்று அளித்துள்ள ஆவணங்களில் ஒன்றான கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் சான்றில் திருமதி. தனலட்சுமி, க/பெ K.R. லோகநாதன் அவர்கள் கூட்டு உரிமையாளர் என்று சான்றளித்துள்ளமையால் ரீ.சர்வே எண் 327/2 –ல் உள்ள கிணற்றில் ஒரு பங்குதாரர் திருமதி Dr. மோகனாபாலுசாமி மற்றொரு பங்குதாரர் திருமதி. தனலட்சுமி அல்லது திரு. K.R. லோகநாதன் இவர்களில் யார் என்பதை வருவாய்த்துறை ஆவணங்களின் படி உரிமையை உறுதி செய்து அவர்களின் பெயரை மின் இணைப்பு உரிமையாளர் பெயருடன் சேர்க்க உரிய விண்ணப்பம் மற்றும் ஆவணங்களைப் பெற்று அவற்றின் அடிப்படையில் மின் கழக விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு செயற்பொறியாளர், நகரியம், ஈரோடு அவர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. விவசாய மின் இணைப்பில் பெயரை சேர்க்க உத்தரவு வழங்கும் அதிகாரம் பெற்ற செயற்பொறியாளர், நகரியம், ஈரோடு அவர்களை பரிசீலனை செய்ய கழக விதிகளின் படியே மன்றம் பரிந்துரை செய்துள்ளது. மேலும் கழக விதிகளின் படி 1–ம் எதிர் முறையீட்டாளர் பெயரைச் சேர்ப்பதற்கான உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்தால் மட்டுமே பெயரைச் சேர்க்க முடியும் என்று இறுதி உத்தரவில் தெளிவாக எடுத்துரைத்த போதிலும் மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்ற உத்தரவு சட்டப்படியல்ல என மேல்முறையீட்டாளர் கூறியிருப்பது தவறானது என்று தெரிவிக்கப்படுகிறது.

5.9 தற்போது திரு. K.R. லோகநாதன் அவர்கள் வழங்கிய ஆவணங்களில் கிராம நிர்வாக அலுவலர் அவர்களது 15.05.2015 நாளிட்ட சான்றில் ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், கவுந்தம்பாடி கிராமம், சத்தி ரோடு, கதவு எண் 603–ல் வசித்து வரும் (லேட்) ராமசாமி மகன்

திரு. மு.சு. லோகநாதன் என்பவருக்கு மேற்படி வட்டம் 27–அ சலங்கபாளையம் கிராமம் ரீ.ச.எண் 327/2க்ஷ –ல் அமைந்துள்ள கிணறு மற்றும் மின் இணைப்பு எண் ஊ. 020 008 308 –ம் மற்றும் கிணற்றில் அமைந்துள்ள மின் மோட்டார் உபகரணங்களும் பொதுவில் 1/2 ல் பங்கு பாத்தியம் (Dec No. 639-1990. 27/06/1990) எனவே திரு. K.R. லோகநாதன் பெயரையும் மேற்படி மின் இணைப்பில் சேர்க்கலாம் என அத்தாட்சி செய்கிறேன் (சர்வே எண் 327/2 உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது). என வழங்கப்பட்டுள்ளது எனினும் மின் இணைப்பு எண் 020 008 308 –ன் கூட்டுரிமையாளர் திரு. K.R. லோகநாதனின் பெயரைச் சேர்க்க அனுமதி வழங்குவதற்கு வட்டாட்சியர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்ட பட்டா, சிட்டா, அடங்கல், FMB, ஆகிய ஆவணங்களை அளித்தால் அம்மின் இணைப்பில் திரு. K.R. லோகநாதன் அவர்கள் பெயரைச் சேர்க்க கழக விதிகளின் படி அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

5.10 மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் தெளிவாக உள்ளதால் உரிமையியல் நீதி மன்றத்தின் மூலம் மின் இணைப்பு உரிமையை ஊர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை என்றும், மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் படியே இறுதி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றும் சமர்ப்பிக்கப்படுகிறது.

6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை :</u>

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரர்களும், தங்களுடைய வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக, 31–07–2015 அன்று கேட்புரை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளரின் சார்பில் திரு. M.P. முருகேசன், வழங்கறிஞர் அவர்களும் திரு. B.A. துரைசாமி அவர்களும் கலந்து கொண்டு தங்களது தரப்பு வாதத்தை எடுத்துரைத்தனர்.

6.3 எதிர்மனுதாரர் –1 திரு. K.R. லோகநாதன் அவர்களின் சார்பில் திரு. K.L. குமாரவேல், அவர்கள் கலந்து கொண்டு, தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

6.4 எதிர்மனுதாரர் –2 அவர்களின் சார்பில் திரு. V. ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர் / கவுந்தன்பாடி அவர்களும், திரு. V. பழனியப்பன், இளநிலை பொறியாளர்/நகரம், கவுந்தன்பாடி அவர்களும் கலந்துகொண்டு, தங்களுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

**7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

7.1 திரு.M.P. முருகேசன் வழக்கறிஞர் அவர்கள், மேல்முறையீட்டாளரது மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 வழக்கறிஞர் அவர்கள், விவசாய விண்ணப்பம் சமர்பித்தது திரு. R. நடராஜன், அவர்கள்தான் என்றும் எனவே மின் இணைப்பு திரு. R. நடராஜன் அவர்களுக்கு மட்டுமே சொந்தம் என்றும் மேல்முறையீட்டாளருடைய நிலத்தை விற்பனை செய்யும் பொழுது 1/2 பங்கு விவசாய மின் இணைப்பையும் திருமதி. மோகனா பாலுசாமி அவர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்றும், திரு. லோகநாதன் அவர்களுக்கு, மின் இணைப்பில் உரிமை எதுவும் இல்லை என்று வாதிட்டார்.

7.3 திரு. K.R. லோகநாதன் சுட்டிக்காட்டும் பாகப்பிரிவினை ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத ஆவணம் எனவே அது சட்டப்படி செல்லாது என்றும் மேலும், அந்த ஆவணத்திலும், மின் இணைப்பு எண் 308 ன் உரிமை பற்றி குறிப்பிடப்படவில்லை. எனவே, திரு. லோகநாதனுக்கு, மின் இணைப்பு எண் 308ல் சட்டப்படியான உரிமையில்லை என்று வாதிட்டார். மேலும், அந்த பாகப்பிரிவினையில் மின் இணைப்பு எண் 106ல் தான் பாத்தியம் உண்டு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

7.4 வழக்கறிஞர் அவர்கள் திருமதி மோகனா பாலுசாமி அவர்களின் பெயரில் மேற்கண்ட மின் இணைப்பை மாற்றுவதற்கு, மின் இணைப்பின் உரிமைதாரரான திரு. நடராஜன் அவர்கள் பாரம்1ல் கையொப்பமிட்டு தன்னுடைய சம்மதத்தை தெரிவித்துள்ளார். எனவே, மின் இணைப்பின் பெயர் மாற்றம் சட்டப்படிதான் நடந்துள்ளது என்று வாதிட்டார்.

7.5 மேலும் 7.5 HP என்ற மின்பளுவை, தங்களின் விண்ணப்பத்தின் பேரில்தான் 5 HP என்று மாற்றப்பட்டது என்றும் தெரிவித்தார்.

7.6 மேலும், தன்னுடைய தரப்பு எழுத்துபூர்வமான வாதுரையையும் சமர்பித்தார். அந்த வாதுரையில் கீழ்கண்ட வாதங்களை தெரிவித்துள்ளார்.

i) 30.09.1986 பதிவு செய்யப்படாத பாகப்பிரிவினை ஒப்பந்தம் சட்டப்படி ஏற்புடைய ஆவணம் இல்லை. It has no evidentiary value சாட்சியங்கள் மூலமும் அந்த ஆவணத்தை ருசு செய்யவில்லை. 020–008–308ல் K.R. லோகநாதனுக்கு எந்தவித பாத்தியமும் இல்லை, K.R. நடராஜனுக்கு தனித்து பாத்தியம்.

ii) 30.06.1986 சாட்சிய மதிப்பில்லாத ஆவணத்திலும் மின் இணைப்பு எண் 106ல் தான் K.R. லோகநாதனுக்கு பாத்தியம் கண்டு எழுதப்பட்டுள்ளது. K.R. லோகநாதன் சேர்க்கக் கோரும் மின் இணைப்பு 308.

iii) சேர்க்கக்கோரும் மின் இணைப்பில் K.R. லோகநாதனுக்குப் பாத்தியமே இல்லை. சேர்க்க கூறும் மின் இணைப்பில் K.R. லோகநாதனுக்கு பாத்தியம் மறுக்கப்படும் போது பாத்தியம் உள்ளது என்று ஆவணங்கள் மூலமாகவோ நீதிமன்ற மூலமாகவோ K.R. லோகநாதன் பாத்தியம் கோர முடியும்

iv) மின் இணைப்பு எண் 308 K.R. நடராஜனுக்கு தனித்து பாத்தியம், K.R. நடராஜன் பெயரில் உள்ள மின் இணைப்பில்தான் மேல்முறையீட்டாளர் பெயர் சேர்க்க அதுவும் K.R. நடராஜனிடம் மேல்முறையீட்டாளரை சேர்க்க ஆட்சேபனை இல்லை என்று சான்று பெற்றுதான் மின்வாரியத்தார் மேல்முறையீட்டாளரை சேர்க்க உத்திரவு பிறப்பித்துள்ளார்கள்.

v) K.R. நடராஜன் தனித்து மின் இணைப்பு கோரிய விண்ணப்பம் மின் வாரியத்தின் வசம்தான் இருக்கிறது. மேலும் மின் இணைப்பு 308 ஆரம்பம் முதல் நாளது வரை மேல்முறையீட்டாளருடன் சேர்ந்து பராமரிப்பு செய்ததாக கூறுவதற்கு ஆவணம் தாக்கல் இல்லை. K.R. லோகநாதன் மின் இணைப்பு 308யோ, அதிலுள்ள மின்மோட்டாரையோ எந்த

தருணத்திலும் அனுபவித்தது இல்லை. கிணறு பொதுவாக இருப்பதினால் மட்டும் மின் இணைப்பிலும் பாத்தியம் கோரமுடியாது.

vi) வருவாய் துறை ஆவணங்களில் K.R. லோகநாதன் பெயர் இல்லை, அவரது மனைவி தனலட்சுமி பெயரில் உள்ளதாக கிரரம நிர்வாக அலுவலர் சான்றிதழில் இருப்பதாக 27.06.1990 இருந்து தெரியவருகிறது, K.R. லோகநாதன் 04.02.2015ம் தேதியிட்ட விண்ணப்பத்தின் போது அவருக்கு மின் இணைப்புள்ள கிணறு மற்றும் பூமிகளில் பாத்தியம் ஏதும் இல்லை என்று தெரிய வருகிறது.

vii) மின்நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் K.R. லோகநாதன் பெயர் சேர்க்க கூறியுள்ள மனுவில் அவரது மனைவி தனலட்சமி தரப்பினர் இல்லை. இருப்பினும் K.R. லோகநாதனையோ, தனலட்சுமியையோ சேர்க்க நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்தது சட்டப்படி ஏற்கமுடியாது. மின் இணைப்பில் மனுவில் கோராத நபரை மின் இணைப்பில் சட்டப்படி சேர்க்க முடியாது. K.R. லோகநாதனுக்கு பாத்தியம் இல்லாத நிலையில் சேர்க்கக் கோராத தனலட்சுமியை சேர்க்க முடியாது. தனலட்சுமிக்கு ஏதாவது ஆவணத்தின் மூலமாகதான் Revenue Recordல் தனலட்சுமி பெயர் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். K.R. லோகநாதன்தான் தனலட்சுமிக்கு ஆவணம் மூலம் பாத்தியம் கொடுத்திருக்க வேண்டும். அந்த ஆவணத்தைப் பார்த்தால் மின் இணைப்பு கோரும் மின் இணைப்பு விபரம் தெரியவரும்.

viii) மனுதாரர் K.R. லோகநாதன் தெரிவித்த விபரங்களுக்கு மேல்முறையீட்டாளர் குறுக்கு விசாரணை (Cross Examination) செய்ய அனுமதிக்கப்படவில்லை. குறுக்கு விசாரணை செய்தால்தான் மனுதாரர் விபரங்களின் உண்மைநிலை தெரியும். கிணறு மற்றும் பூமிகளில் மேல்முறையீட்டாளருக்கும் K.R. லோகநாதனுக்கு பாதி பாத்தியம் உள்ளது என்று கருத முடியாது. K.R. லோகநாதனுக்கு மின் இணைப்பில் பாதி பாத்தியம் உள்ளது என்று 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் முடிவுக்கு வந்தது சட்டப்படி சரியல்ல.

ix) பொது கிணற்றில் பங்குதாரர் ஒருவர் தனித்து மின் இணைப்பு பெறக் கூடாது முடியாது என்று மின்சார விதிமுறையில் இல்லை. சட்டப்படி பங்குதாரர் தனித்து மின் இணைப்பு பெற்று கொள்ளலாம். மேல்முறையீட்டாளரின் கிரையத்தார் K.R. நடராஜன் தனித்து மின்இணைப்பு பெற்றுள்ளதில் K.R. லோகநாதன் அல்லது தனலட்சுமியை மின் இணைப்பில் சேர்க்கக் கூடாது.

**8. <u>எதிர்மனுதாரர் 1 அவர்கள் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

8.1 எதிர்மனுதாரர் திரு. K.R. லோகநாதன் அவர்கள் சார்பில் அவரது மகன் திரு. K.R. குமாரவேல் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

8.2 திரு. K.R. குமாரவேல் அவர்கள், தன்னுடைய தந்தைக்கும், அவரின் சகோதரர், திரு. K.R. நடராஜன் அவர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி சர்வே எண் 327/2ல் உள்ள கிணறு இருவருக்கும் சரிபாதியாக பிரிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த கிணற்றிலுள்ள மின் இணைப்பு எண்ணிலும், இருவருக்கும் சரிபாதியாக பங்கு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று வாதுரை புரிந்தார். மேலும், அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் பக்கம் 4ல் உள்ள பத்தி 8ல் மின் இணைப்பு எண் 372 என்று தவறாக பதிவு செய்யப்பட்டு உள்ளது என்றும், ஆனால், மீண்டும் திரு. R. நடராஜன் அவர்களும், திரு. K.R. லோகநாதன் அவர்களும் 27–8–99ல் நோட்டரி அவர்களின் முன்னால் ஏற்படுத்திய பிரமாணபத்திரத்தின் பத்தி 8ல் மேற்கண்ட மின் இணைப்பு எண் 308லும் இருவருக்கும், பொதுவில் சரிபாதி என்று தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்து அதன் நகலையும் அளித்துள்ளார். மேலும், மேற்கண்ட ஆவணத்தின்படி திரு. K.R. லோகநாதன் அவர்களுக்கு மின் இணைப்பு எண் 308ல் சரிபாதி பாத்தியம் உள்ளது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டார்.

8.3 மேலும், அவர்கள் மேற்கண்ட சர்வே எண் 327/2ல் உள்ள கிணற்றையும், மின் இணைப்பையும் இதுவரை தாங்களும் பயன்படுத்தி வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

8.4 திரு K.L. குமாரவேல் அவர்கள், மேல் முறையீட்டாளர் அளித்துள்ள பெயர் மாற்ற ஆவணத்தில் திருமதி தனலட்சுமி அவர்களுக்கு கிணற்றில் பாத்தியதை உண்டு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது அது எவ்வாறு என்றும் கேள்வி எழுப்பினார்.

8.5 திரு. R. நடராஜன் அவர்கள், தன்னுடைய பங்கு ஆன பொதுவில் பாதி கிணறும், கிணற்றில் அமைந்துள்ள மின் மோட்டார் சர்வீஸ் எண்.C308லும் அதன் உபகரணங்களில் பொதுவில் பாதி என்று தான் திருமதி. மோகனா பாலுசாமி அவர்களுக்கு விற்பனை செய்த பத்திரத்தில் பதிவு செய்துள்ளார். எனவே, மின் இணைப்பில் பாதிதான் அவருக்கு சொந்தம் மீதமுள்ள பாதி திரு. R. லோகநாதன் அவர்களுக்கும் ஏற்கனவே, பாகப்பிரிவினையின்படி சொந்தம் என்று உறுதி செய்யப்பட்டுவிட்டதால் தான், அவர், தன்னுடைய பங்கு ஆன கிணறு மற்றும் மின் இணைப்பில் பாதி என்பதை மட்டும் தன்னுடைய சொத்து விற்பனை பத்திரத்தில் பதிவு செய்துள்ளார் என்றும் வாதிட்டார்.

**9. <u>எதிர்மனுதாரர் (2) அவர்கள் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

**9.1** திரு. ப. ரவிச்சந்திரன் உதவிச் செயற்பொறியாளர், கேட்புரை நாளில் தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

**9.2** உதவி செயற்பொறியாளர், எதிர்மனுதாரர் (2)ன் பதிலுரையை மீண்டும் வலியுறுத்தினார்.

**9.3** 25.8.1985 ல் திரு.R. நடராஜன் மற்றும் திரு. R. லோகநாதன் அவர்களுக்கும் உள்ள குடும்ப ஏற்பாட்டின்படி, சர்வே எண் 327/2ல் உள்ள கிணறு மற்றும், அதிலுள்ள 7.5 HP மின்மோட்டார் பம்புசெட், மின் இணைப்பு எண் ஆகியவை பொதுவில் சரிபாதியாக திரு. K.R. லோகநாதன் அவர்களுக்கு சொந்தம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், திரு. R. நடராஜன் அவர்கள் தன்னுடைய பங்கு ஆன கிணறு, மற்றும் மின் இணைப்பு எண் 308 ஆகியவற்றில் பொதுவில் பாதியைத்தான் கிரயம் செய்து திருமதி மோகனா பாலுசாமி அவர்களுக்கு கொடுத்துள்ளதால், மேல்முறையீட்டாளர், மின் இணைப்பின் பொதுவில் பாதியில்தான் உரிமையாளர் என்பதாலும், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திரு. K.R.லோகநாதன்

அல்லது அவரின் மனைவி திருமதி தனலட்சுமி ஆகிய இருவரில் யாருக்கு தற்பொழுது உரிமை உள்ளதோ அவர் பெயருக்கு மாற்றலாம் என்று ஆணையிட்டுள்ளது என்று வாதிட்டார்.

9.4 ஒரு கிணற்றில் மின் இணைப்பு பெறுவதற்கு கூட்டு உரிமை உள்ளவர் Indemnity Bond கொடுத்து மின்இணைப்பு பெற்றுக் கொள்ளலாம் என்றும், co-owner தன்னுடைய பெயரில் அதே கிணற்றில் வேறு மின்இணைப்பு பெற்றுக் கொள்ளவும் வாரிய விதிகளில் வழியுள்ளது என்றும் தெரிவித்தார்.

9.5 மேலும், விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் திரு. R. நடராஜன் அவர்களின் பெயரில்தான் பதிவு செய்யப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அந்த விண்ணப்பத்தின் நகலையும் சமர்ப்பித்தார்.

9.6 மேலும், குடும்ப ஏற்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள கிணற்றிலுள்ள மின் இணைப்பு எண் 372 என்று ஒரு வீட்டு மின் இணைப்பு என்றும், அது திருமதி லட்சுமி, என்பவர் பெயரிலுள்ளது என்றும், திரு. V. பழனியப்பன், இளநிலை பொறியாளர் / கவுந்தன்பாடி அவர்கள் தன்னுடைய 31.7.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும், 4.8.2015 நாளிட்ட கடிதத்துடன் சோதனை தாள் மற்றும் தாழ்வழுத்த ஒப்பந்த பத்திரம் ஆகியவற்றையும் சமர்ப்பித்துள்ளார்.

**10. <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

10.1 மேல்முறையீட்டாளர், எதிர்மனுதாரர் (1) மற்றும் எதிர்மனுதாரர் (2) ஆகிய அனைவரின் வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) விவசாய மின் இணைப்பு எண் 308ன் யாருடைய பெயரில் விண்ணப்பிக்கப்பட்டது? யாருடைய பெயரில் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது?

(ii) எதிர்மனுதாரர் (1) ன் கோரிக்கையான அவரையும் மின் இணைப்பு எண் 308ல் பங்குதாரராக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது ஏற்புடையதா?

**11 <u>வழக்கெழுவினா ஒன்றிற்கான தீர்வு</u>**

**11.1** மேல்முறையீட்டாளர், மின் இணைப்பு எண் **308** என்பது, திரு.R. நடராஜன் அவர்கள் தனித்து, விண்ணப்பம் செய்து, அவர் பெயரில் பெற்ற மின் இணைப்பு ஆகும். எனவே, திரு.R. நடராஜன் மட்டுமே, மின் இணைப்பு எண் **308**ன் உரிமையாளர், திரு. K.R.லோகநாதன் தனக்கும் பொதுவில் பாதி உரிமை என்று கோர சட்டப்படி உரிமையில்லை என்று வாதிட்டுள்ளார்.

**11.2** எதிர்மனுதாரர் **(1)** திரு. R. நடராஜன் மற்றும் திரு.K.R.லோகநாதன் இருவரும் செய்துகொண்ட குடும்ப ஏற்பாட்டின்படி, மேற்கண்ட மின் இணைப்பு இருவருக்கும் பொதுவில் பாதி சொந்தம் என்று உள்ளது எனவே, மின் இணைப்பில் இருவருக்கும் உரிமை உள்ளது என்று வாதிட்டுள்ளார்.

**11.3** எதிர்மனுதாரர் **(2)** விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு சமர்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நகலை சமர்பித்துள்ளார்.

**11.4** இந்த வழக்கெழு வினாவிற்கு தீர்வு காண, நாம், மின் இணைப்பு எண் **308** பெறுவதற்கு சமர்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை ஆராய வேண்டும்.

**11.5** அவ்வாறு ஆராய்ந்து பார்க்கும் பொழுது, கீழ்கண்ட தகவல்களை அறிய முடிகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : | R. நடராஜன் |
| 2. | விண்ணப்பதாரர்களின் முழு தகவல் விலாசம் | : | S/o ராமசாமி முதலியார்<br>**56** சத்தி ரோடு,<br>கவுந்தம்பாடி, (PO) பவானி (TK) |
| 3. | கிணறு உள்ள நில அளவையின் எண். (சர்வே எண்) | : | SF No.327/2 (Old SF **161/3B1** |
| 4. | கிராமத்தின் பெயர் | : | சலங்கபாளையம் |
| 5. | தாலுக்கா | : | பவானி (தாலுகா) |
| 6. | ஜில்லா | : | பெரியார் மாவட்டம் |
| 7. | தேவையான பம்ப் விசையின் சக்தி(குதிரை ஓட்டம்) | : | **7.5** HP |
| 8. | மேற்படி பம்ப் விசையினால் பாசனம் செய்யப்படும் நிலத்தின் அளவு | : | **10** ஏக்கர் |
| 9. | xxx xxx xxx | | |
| | xxx xxx xxx | | |
| 19. | விண்ணப்பம் செய்யும்தேதி | : | **23.3.82** |
| 20. | விண்ணப்பதாரரின் கையெழுத்து | : | xxx xxx xxx |

*xxx xxxx xxx*

xxxx xxxx xxxx

விண்ணப்பதாரரின் கையெழுத்து

<u>கிராம அதிகாரியின் சான்று</u>

*இந்த விண்ணப்பத்தில் கண்டுள்ள நில அளவை எண்.327/2 சலங்கபாளையம் கிராமத்தில் உள்ள கிணறு திரு. ஆர். நடராஜு, திரு. ராமசாமி முதலியார் அவர்களின் குமாரர் அவர்களுக்கு மட்டும் / <u>xxx xxx xxx</u> அவர்களுக்கும் கூட்டமாகச் சொந்தம் என உறுதி கூறுகிறேன். SMIP ஆயக்கட்டு பூமிக்குட்பட்டது. . .. . வாய்க்காலுக்கு 200'(இருநூறு) தூரத்தில் உள்ளது.*

*xxx xxxx xxx*
*கிராம அதிகாரியின் கையெழுத்து*

11.6 மேற்கண்ட விபரங்களை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது விண்ணப்பம் திரு. R. நடராஜன் பெயரில் சர்வே எண். 327/2 என்ற நிலத்திலுள்ள கிணற்றிற்கு 7.5 HP மின்பளு வேண்டி விவசாய விண்ணப்பம் 23.3.1982ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அதிலுள்ள கிராம நிர்வாக அலுவலரின் சான்றின்படி மேற்படி 327/2ல் உள்ள கிணறு திரு. ஆர். நடராஜன், த/பெ ராமசாமி முதலியாருக்கு மட்டும் சொந்தம் என்றும் அறிய முடிகிறது.

11.7 மேற்கண்ட தகவலின்படி சர்வே எண்.327/2இல் உள்ள கிணற்றிற்கு மேல்முறையீட்டாளர் திரு. R. நடராஜன் பெயரில் மட்டும்தான் விவசாய மின் இணைப்பு கோரி விண்ணப்பம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அந்த கிணற்றிற்கு அவர் மட்டும்தான் உரிமையாளர் என்று கிராம நிர்வாக அலுவலர் சான்று அளித்துள்ளார் என்றும் தெரிகிறது. எனவே, மேல்முறையீட்டாளர் திரு. R. நடராஜன் பெயரில்தான் விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

11.8 மேலும், 22.1.1985 நாளிட்ட உதவி கோட்டப் பொறியாளர்/கவுந்தம்பாடி அவர்களின் மதிப்பீட்டு அனுமதியிலும், 30.1.1985 அன்று மின் இணைப்பு வழங்கும் பொழுது எடுக்கப்பட்ட சோதனைத்தாளிலும் (*test report*) மின்வாரிய ஒப்பந்தத்திலும் (*agreement*) திரு. R. நடராஜன் பெயர் மட்டுமே விண்ணப்பதாரர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மின் இணைப்பு திரு. R. நடராஜன் அவர்களின் பெயரில்தான் வழங்கப்பட்டுள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 12. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>

12.1 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண்.308, திரு. R. நடராஜன் அவர்களால் தனியாக விண்ணப்பிக்கப்பட்டு அவரின் பெயரில் வழங்கப்பட்ட விவசாய மின் இணைப்பு என்றும், அந்த மின் இணைப்பை அவர்கள் சர்வே எண்.327/2 நிலத்திலுள்ள திரு. R. நடராஜன் அவர்களின் பங்கு சொத்தை விலைக்கு வாங்கும்பொழுது ஏற்படுத்தப்பட்ட விற்பனை

பத்திரத்தின்படி மேல்முறையீட்டாளர் அந்த மின் இணைப்பின் பொதுவில் பாதிக்கு உரிமையாளர் ஆவார் என்று வாதிட்டுள்ளார்.

12.2 மேலும், மேற்கண்ட மின் இணைப்பு திருமதி மோகனா பாலுசாமி அவர்களின் பெயருக்கு மாற்றம் செய்யும் பொழுது மின்இணைப்பின் உரிமையாளர் திரு. R. நடராஜன் அவர்களின் சம்மதம் பெறப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளர் மட்டும்தான் அந்த மின் இணைப்பின் உரிமையாளர் என்றும் வாதுரை புரிந்துள்ளார்.

12.3 மேலும், பதிவு பெறாத 25.8.1985 நாளிட்ட குடும்ப ஏற்பாடுவிலுள்ள பாகஉடன் படிக்கையின்படி திரு. K.R.லோகநாதன் அவர்களுக்கும் அந்த மின் இணைப்பில் உரிமை உள்ளது என்பது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றும் வாதிட்டுள்ளார்.

12.4 மேலும், திரு. K.R.லோகநாதனையும் பங்குதாரராக சேர்க்ககோரும் மின் இணைப்பில் திரு. K.R.லோகநாதன் அவர்களுக்கு பாத்யதை இல்லை. அவ்வாறு பாத்தியதை மறுக்கும் பொழுது பாத்தியம் உள்ளது என்பதை ஆவணங்கள் மூலமாகவோ அல்லது நீதிமன்ற ஆணையின் மூலமாகத்தான் கோரமுடியும் என்று வாதிட்டார்.

12.5 மேலும், தன்னையும் மின் இணைப்பில் ஒரு பங்குதாரராக சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை அளிக்காத திருமதி. தனலட்சுமி அவர்களுக்கும் பாத்தியதை உண்டா என்பதை வருவாய் ஆவணங்கள் மூலம் ஆராய்ந்து தகுதியிருந்தால் சேர்க்கலாம் என்பது சட்டப்படி தவறு என்றும் வாதிட்டுள்ளார்.

12.6 முதலாம் எதிர்மனுதாரர் திரு. K.R.லோகநாதன் அவர்களின் பிரதிநிதி 25.8.1985இல் திரு. R. நடராஜன் மற்றும் திரு. K.R.லோகநாதன் ஆகிய இருவரும் சேர்ந்து ஏற்படுத்திய குடும்ப ஏற்பாடு என்ற பாகப்பிரிவினை ஒப்பந்தத்தின்படி திரு. K.R.லோகநாதன்அவர்களுக்கு சர்வே எண்.327/2 அதில் உள்ள கிணறு அதில் நிறுவியுள்ள 7.5 HP மின் மோட்டார் பம்பு செட் சகிதங்களில் பொதுவில் பாதியும் சொந்தம் என்று பிரிக்கப்பட்டுள்ளது, எனவே, மேற்கண்ட ஆவணத்தின்படி திரு. K.R.லோகநாதனுக்கும் கிணறு மற்றும் மின் இணைப்பில் பாதி பங்கு உள்ளது என்பதால் திரு. K.R.லோகநாதனின் பெயரையும் மின் இணைப்பில் சேர்க்கவேண்டும் என்று வாதிட்டார்.

12.7 மேலும்,மேற்கண்ட பாகப்பிரிவினைப்பத்திரத்தில் மின் இணைப்பு எண். தவறுதலாக 372 என்று போடப்பட்டுள்ளது என்றும், ஆனால், திரு. R. நடராஜன் மற்றும் K.R. லோகநாதன் இருவரும் 27.8.1999ல் ஏற்படுத்தி கொண்ட பிராமாணபத்திரத்தில் மேற்கண்ட குடும்ப ஏற்பாடுவிலுள்ள மேற்கண்ட தவறு திருத்தப்பட்டு மின் இணைப்பு எண்.308 என்று சரியாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த பிரமானப்பத்திரத்தில் (affidavit) நோட்டரி(notary) அவர்களால் சான்று செய்யப்பட்டள்ளது என்றும் வாதிட்டார்.

12.8 மேலும், விற்பனை பத்திரம் 27.6.1990 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவ்வாறு விற்பனையை பதிவு செய்யும் பொழுது திரு. R.நடராஜன் அவர்கள் தனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.327/2ல் உள்ள 5 செண்ட் நிலம் மற்றும் மின் இணைப்பு எண்.C308 அவற்றின் உபகரணங்களிலும் பொதுவில் பாதியைத்தான் விற்பனை செய்துள்ளார். எனவே, மீதமுள்ள 50 சதவீத பங்கு திரு. K.R. லோகநாதனுக்கு சொந்தம் என்பதால்தான் தனக்கு சொந்தமான 50 சதவீத உரிமையை மட்டும் கிணற்றிலும் மின் இணைப்பிலும் திரு. R.நடராஜன் விற்பனை செய்துள்ளார் என்றும் வாதிட்டார்.

12.9 மேலும், பெயர் மாற்றத்திற்கான சம்மதம் அவரின் பங்கிற்கு மட்டும் என்றும், மேலும், அந்த சமயத்தில் திரு. R. நடராஜன் அவர்கள் உடல் நலமில்லாமல் படுக்கையிலிருந்ததால் அவரின் கையொப்பம் வாங்கப்பட்டிருக்கும். எனவே, அது மின் இணைப்பு முழுவதையும் மாற்றுவதற்கு என்று எடுத்துக் கொள்ள முடியாது என்றும் வாதுரை புரிந்தார்.

12.10 எதிர்மனுதாரர்(2) அவர்களும் பாகப்பிரிவினையின்படி மேற்கண்ட கிணறு அதிலுள்ள மின்இணைப்பு மின் உபகரணங்கள் ஆகியவைகள் பொதுவில் சரிபாதி என்று இருவருக்கும் சொந்தம் என்று செட்யூல் ‘ஏ’ மற்றும் செட்யூல் ‘பி’ யிலும் கூறியுள்ளதால் திரு. R. லோகநாதனுக்கும் அந்த மின் இணைப்பில் பங்கு உள்ளது என்று வாதிட்டார்.

12.11 மேலும், 25.8.85ல் ஏற்படுத்தப்பட்ட குடும்ப ஏற்பாட்டில் மேற்படி மின் இணைப்பின் எண். தவறாக 372 என்று தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் மின் இணைப்பு எண் 372 என்பது திருமதி. லட்சுமி என்பவரின் வீட்டிலிருக்கும் மின் இணைப்பு என்றும் தெரிவித்துள்ளார்.

12.12 ஒரு விவசாய மின் இணைப்பை பெறுவதற்கு ஒரு கிணற்றின் கூட்டு உரிமையுள்ள ஒருவர் உரிமையுள்ள மற்றவர்களின் சம்மதம் இல்லை எனிலும் indemnity bond கொடுத்து மின் இணைப்பை பெற்றுக் கொள்ளலாம் என்று உரிமம்தாரர் கேட்புரையின்பொழுது தெரிவித்துள்ளார். மேலும், co-owner விரும்பினால் அவரும் தனியாக ஒரு மின் இணைப்பு அதே கிணற்றிற்கு பெறவும் முடியும் என்றும் தெரிவித்தார். எனவே, ஒருவர் கிணற்றிற்கு உரிமையுள்ளவர் என்பதால் மின் இணைப்பிற்கும் உரிமை உள்ளவர் என்ற தீர்வு செய்ய முடியாது என்று தெரிகிறது.

12.13 மேலும், திரு. K.R. லோகநாதன்அவர்களும் மின் இணைப்பின் பெயர் மாற்றம் திருமதி. மோகனா பாலுசாமி என்று செய்தது தவறு என்று வாதாடவில்லை, அவருக்கு மின்இணைப்பில் உரிமையில்லை என்றும் வாதாடவில்லை தன்னையும் ஒரு பங்குதாரராக மின்இணைப்பில் சேர்த்து கொள்ளவேண்டும் என்பதுதான் அவரின் வாதம்.

12.14 மேற்கண்ட அவரின் கோரிக்கைக்கு ஆதாரமாக அவர் சுட்டிகாட்டும் ஆவணம் 25.8.85 நாளிட்ட திரு. R. நடராஜன் மற்றும் திரு. K.R. லோகநாதன் ஆகிய இருவருக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட குடும்ப ஏற்பாடு ஆகும்.

12.15 மேற்கண்ட குடும்ப ஏற்பாடு ஒரு பதிவு செய்யப்படாத ஆவணமாகும். ஆனால், மேற்கண்ட குடும்ப ஏற்பாட்டின்படி தன்னுடைய பாகம் என்று அறிவிக்கப்பட்ட சர்வே எண். 327/2ல்உ ள்ள 2 ஏக்கர் 5 செண்டு நிலம் மற்றும் அந்த சர்வே எண்ணிலுள்ள மின்இணைப்பு எண். இன்று 7.5 HP மின் பம்பு செட் சகிதங்களில் பொதுவில் பாதி ஆகியவை திரு. R. நடராஜனுக்கு அந்த குடும்ப ஏற்பாட்டின்படிதான் சொந்தமாகிறது அதைத்தான் அவர் மேல்முறையீட்டாளருக்கு விற்பனை செய்துள்ளார். விற்பனை செய்யும்பொழுது மின் பம்புசெட் 5HP என்றுதான் விற்பனை பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேல்முறையீட்டாளர் அவரின் விண்ணப்பத்தின்படிதான் மின் பம்புசெட்டின் மின் பளு 7.5 HP என்பதிலிருந்து மின் பளுவை 5 HP ஆக குறைக்கப்பட்டுள்ளது என்ற வாதம் ஏற்புடையது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

12.16 ஒரு பதிவு செய்யப்படாத குடும்ப ஏற்பாடு சட்டப்படி செல்லத்தக்கதா இல்லையா என்பது பற்றி தீர்வு காண்பது மின் குறைதீர்ப்பாளரின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டது ஆகும். எனவே, அந்த குடும்ப ஏற்பாட்டின்படி திரு. K.R. லோகநாதன் அவர்களுக்கு மின் இணைப்பின் பங்கு உள்ளது என்பதால் திரு. K.R.லோகநாதன் அவர்களை இந்த மின் இணைப்பில் பங்குதாரராக ஆக்க வேண்டும் என்ற உரிமை பிரச்சனைக்கு ஒரு நீதிமன்றம்தான் தீர்வு காண முடியும் என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் எனக்கு ஏற்புடைதாக உள்ளது.

12.17 இந்த வழக்கில் என்னுடைய வழக்கெழுவினா ஒன்றிற்கான தீர்வின்படி மின் இணைப்பு எண்.308இன் விண்ணப்பதாரர் மற்றும் உரிமையாளர் திரு. R. நடராஜன் ஆவார். மேற்கண்ட மின் இணைப்பின் இசைவு பத்திரம் (agreement) திரு. R. நடராஜனுக்கும் மின் வாரியத்திற்கும் தான் போடப்பட்டுள்ளது. எனவே, திரு. R. நடராஜன் அவர்கள்தான் மேற்கண்ட மின் இணைப்பின் agreement holder ஆவார். அவருடைய பெயரிலிருந்த மின் இணைப்பு என் 308, திருமதி. மோகனா பாலுசாமி அவர்களின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த பெயர் மாற்றத்திற்கு சம்மதம் என்று படிவம் 1இல் தன்னுடைய இசைவினையும் திரு. R. நடராஜன் தெரிவித்துள்ளார். அந்த பெயர் மாற்ற படிவம்(1) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*பெயர் மாற்றும் படிவம் 1*

*பெறுநர்*

*செயற்பொறியாளர்*
*பெரியார் மின் விஸ்தரிப்பு வட்டம்,*
*ஈரோடு*

*மின்சார விநியோகம் அனுமதிக்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண்.308, IV C (தெரு /ஊரின் பெயர் கிருஷ்ணாபுரம் சலங்கபாளையம்) உரிமையாளர் திரு. R. நடராஜன் , த/பெ ராமசாமி முதலியார் ஆகிய நான் என்னுடைய உறவினர் திரு. Dr. மோகானா பாலுசாமி அவர்களுக்கு விற்று விட்ட காரணத்தினால் என் பெயரில் உள்ள மின்சார விநியோகக் கணக்கு எண்.308, IVCஐ திருமதி. Dr. மோகனா பாலுசாமி , க/பெ Dr. பாலுசாமி அவர்களுக்கு மாற்றுதற்குரிய என் இசைவினை இதன் மூலம் தெரிவிக்கிறேன்.*

*பினை வைப்பு தொகை மற்றும் மின்னிணைப்புக் கட்டணங்களுடன் மாறுதல் செய்துவிடலாம்.*

*பினை வைப்புத் தொகை மற்றும் மின்னணைப்புக் கட்டணங்களை தவிர்த்து மின்னிணைப்பு மாற்றம் செய்யபபட்டு என்னுடைய பெயரில் இல்லாத மின் விநியோகத்துடன் அவை ஒருக்கால் சேர்க்கப்பட்டக்கூடுமானால் விதிமுறைக்குட்பட்டு பெயர் மற்றுதற்குரியவர் தான் அதனை செலுத்த வேண்டும்.*

Sd / xxx xxx xxx
*பெயர் மாற்றும் செய்பவரின் கையொப்பம்*
*முழுமையான முகவரியுடன்*

*இடம்*
*நாள்*

**12.18** மேற்கண்ட சம்மதக்கடிதத்தின்படி திரு. நடராஜன் அவர்கள் தன்னுடைய பெயரிலுள்ள மின் இணைப்பு எண்.308ஐ திருமதி. Dr. மோகனா பாலுசாமி அவர்கள் பெயரில் மாற்றுவதற்கு சம்மதம் அளித்துள்ளார் என்று தெரிகிறது.

**12.19** இந்த வழக்கில் திரு. R. நடராஜன் பெயரில் தான் மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது. எனவே, அவர்தான்மின் இணைப்பு எண்.308இன் agreement holder ஆவார். அந்த மின் இணைப்பை அவரிடமிருந்து நிலத்தை வாங்கிய ஆனால், கிணறு மின் இணைப்பு எண்.308 மற்றும் மின் உபகரணங்களின் பொதுவில் பாதியை விலைக்கு வாங்கிய திருமதி. மோகனா பாலுசாமி அவர்களின் பெயரில் மாற்றுவதற்கு சம்மதம் மின் இணைப்பின் உரிமையாளரான திரு. R. நடராஜன் அவர்களால் கொடுக்கப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த சம்மதக்கடிதத்திலும், திரு. K.R.லோகநாதன் பெயரையும் மின் இணைப்பின் உரிமையாளராக

சேர்க்கவேண்டும் என்று தெரிவிக்கப்படவில்லை. மேலும், விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்திலும் திரு. K.R. லோகநாதன் அவர்கள் கூட்டு விண்ணப்பதாரர் என்று தெரிவிக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட மின்இணைப்பின் கூட்டு உரிமையாளராக திரு. K.R. லோகநாதன் அவர்களை சேர்க்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13. முடிவுரை**

**13.1** வழக்கெழு வினா ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வின்படி, ஈரோடு மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் 27.3.2015 நாளிட்ட ஆணை ரத்து செய்யப்பட்டு மேல்முறையீட்டாளரின் மேல்முறையீடு ஏற்றுக் கொள்ளபடுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13.2** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.38/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திருமதி டாக்டர் மோகனா பாலுசாமி,
க/பெ டாக்டர் பாலுசாமி,
சத்தி ரோடு
ஈரோடு, கிருஷ்ணாபுரம்,
கவுந்தம்பாடி, பவாணி வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

2) திரு. கே. ஆர் லோகநாதன்,
603, சத்திரோடு,
கவுந்தம்பாடி
ஈரோடு மாவட்டம் – 638 455.

3) தலைவர்
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
948, ஈ.வி.என். சாலை,
ஈரோடு–9

4) மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி.என். சாலை,
ஈரோடு – 9

5) தலைவர்  மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை
எழும்பூர்,  சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.